DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO. II, VILLUPURAM

| STC.710/2025 | | | |
|---|---|---|---|
| Prosecution Witness: 1 | | | |
| Name | பாபு | | |
| Father's Name/ Husband Name | தேசிகன் | | |
| Village | பாக்கம் | Age | 43 |
| Taluk | | | |
| Both accused present. | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.06.2026

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு** விசாரணை

(அ) நான் நிரந்தரமாக எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு உடன்பிறந்தவர்கள் அண்ணன் தணிகைவேல், தம்பி புருஷோத்தமன், தங்கை சிவசங்கரி ஆவர். நான் எதிரிகளின் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னுடைய மாதம் வருமானம் ரூ.20,000/-. எனக்கு திருமணம் ஆகிவிட்டது. ஒரு மகன், ஒரு மகள் உள்ளார்கள். நான் நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது வருமானத்தை சார்ந்துதான் எனது குடும்பம் உள்ளது என்றால் சரிதான். எனது குடும்ப செலவுகள் குழந்தைகளின் கல்வி செலவுகள், மருத்துவ செலவுகள் ஆகியவற்றை எனது வருமானத்திலிருந்துதான் செய்து வருகிறேன் என்றால் எனது மனைவியும் வேலை செய்கிறார்.

(ஆ) நான் பாக்கம் கிராமத்தில் செந்தில்ராஜ் என்பவரின் 6 ஏக்கரை குத்தகைக்கு எடுத்து பயிர் செய்து வருகிறேன். அதன் மூலமும் எனக்கு வருமானம் வருகிறது. அந்த இடத்தின் பட்டா எண் 583 ஆகும். அந்த இடத்திற்கு வடக்கு பக்கம் அமிர்தலிங்கத்தின் விவசாய நிலமும், கிழக்கே மணிகண்டனின் விவசாய நிலமும், மேற்கே ரவியின் விவசாய நிலமும், தெற்கே ரெட்டியார் நிலம் உள்ளது. பெயர் சரியாக தெரியவில்லை. நான் சொல்வதுபோல் நான் குத்தகைக்கு பயிர் செய்யவில்லை என்றாலும் வருமானம் இருப்பதாக நீதிமன்றத்தில் காட்டுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்

சரியல்ல. நான் குத்தகைக்கு பயிர் செய்வதை காட்டும் விதமாக என்னால் நீதிமன்றத்தில் ஆவணம் எதையும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். கடிதம் வாங்கி தாக்கல் செய்யலாம். 1வது எதிரியை எனக்கு 17 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே தெரியும் என்றால் சரிதான். அவர் எனக்கு நீண்ட கால நண்பர் என்றால் சரிதான். எனக்கு 1வது எதிரியை யார் என்றே தெரியாது என்றாலும் வழக்கிற்காக 17 ஆண்டுகளாக தெரியும் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1வது எதிரியின் தொலைபேசி எண்ணை என்னால் கூறமுடியுமா என்றால் முடியாது.

(இ) எனது புகார்மனுவில் 1வது எதிரியின் வீட்டு விஷேசத்திற்கு நான் செல்வேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிரியின் வீட்டு முகவரியை என்னால் நீதிமன்றத்தில் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் முடியாது. எனக்கும் 1வது எதிரிக்கும் நேரடி தொடர்பு பழக்க வழக்கம் கிடையாது என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் புருஷோத்தமனும் 1வது எதிரியும் TVS நிறுவனத்தில் ஒன்றாக பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது மனுவில் எனது தம்பி புருஷோத்தமன் மூலமாக 1வது எதிரியை தெரியும் என்று கூறியுள்ளேன் என்றாலும் 1வது எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். 1வது எதிரி நட்பு ரீதியாக எனது தம்பியை பார்ப்பதற்கு எனது வீட்டிற்கு வருவார் என்றால் சரிதான். அதனால் 1வது எதிரியை குறித்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

(ஈ) 1வது எதிரிக்கும் எனது தம்பிக்கும் இடையே நட்பு ரீதியாக கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். 1வது எதிரியை எனக்கு தெரியும் என்பதை நிருபிக்கும் விதமாக அவருடன் எடுத்த புகைப்படத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 10.03.2024 அன்று என்னுடைய வீட்டில் 1வது எதிரிக்கு ரூ.4 லட்சம் பணத்தை கொடுத்தேன். 1வது எதிரியிடம் ரூ.4 லட்சம் பணத்தை கொடுத்ததற்கு நேரடி சாட்சிகள் இருந்ததாக எனது புகார் மனுவில் குறிபிடவில்லை என்றால் சரிதான். 1வது எதிரியிடம் ரூ.4 லட்சம் கொடுத்ததற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1வது எதிரி 4 லட்சத்தை பெற்று கொண்டு புரோ நோட்டை எழுதிக் கொடுத்தார். அந்த புரோ நோட்டை பெற்று கொண்டுதான் காசோலைகளை எழுதிக் கொடுத்தார். அந்த காசோலைகளை தாக்கல் செய்துள்ளேன்.

(உ) 1வது எதிரி புரோ நோட்டுகளை திரும்ப பெற்று கொண்டு காசோலைகளை எழுதிக் கொடுத்ததற்கு நேரடி சாட்சிகள் இருந்ததாக எனது புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது வீட்டில் நான் எனது மனைவி, குழந்தைகள் எல்லாம் ஒன்றாகதான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது அப்பா, எனது அண்ணனும் என்னுடன்தான் வசித்து வருகிறார்கள். நான் சொல்வதுபோல் 1வது எதிரி எனக்கு எந்த புரோ நோட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் பின்னிட்டு புரோ நோட்டுகளை பெற்று கொண்டு காசோலைகளை கொடுக்கவில்லை என்றாலும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ரூ.4 லட்சம் பணத்தை வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தேன் என்றால் சரிதான். வங்கியில் நகையை அடமானம் வைத்து அந்த தொகையை கொடுத்தேன்.

(ஊ) எந்த தேதியில் நகையை வங்கியில் அடமானம் வைத்தேன் என்று தேதியை குறிப்பிட்டு என்னால் கூறமுடியுமா என்றால் முடியாது. ஒரு வாரத்திற்கு முன்பு அடமானம் வைத்தேன். நகையை வங்கியில் அடமானம் வைத்ததற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வங்கி ரசீது எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எவ்வளவு அளவிலான நகையை வங்கியில் அடமானம் வைத்தேன் என்றால் 60 கிராம் நகையை அடமானம் வைத்தேன். வங்கியில் ரூ.3.50 லட்சம் நகையை அடமானம் வைத்து பெற்றேன். 1 லட்சம் கையில் வைத்திருந்த தொகையை கொடுத்தேன். ( சாட்சி தற்போது 3 லட்சத்தை வங்கியிலிருந்து பெற்றதாக கூறுகிறார்). எனது புகார் மனுவில் மேற்படி கடன் கொடுத்த தொகையை பெற்ற வழிகளை குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை.

(எ) நான் அனுப்பிய சட்ட அறிவிப்பிலும் எனது புகாரிலும் ஒரே விவரங்கள்தான் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் வங்கியில் அடமானம் வைத்து பணம் பெறவில்லை என்றாலும் அதனால்தான் எனது புகார் மனுவில் அந்த விவரங்களை குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. 1வது எதிரி எழுதிக் கொடுத்த புரோ நோட்டின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1வது எதிரி புரோ நோட்டை என்னிடம் இருந்து திரும்ப பெற்று கொண்டதற்கான எழுத்து பூர்வமான ஆதாரம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1வது எதிரி என்ன பதவியில் வேலை செய்கிறார் என்பதை என்னால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் முடியாது. 1வது எதிரிக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும்

அதனால்தான் அவரை குறித்த விவரங்கள் என்னால் சரியாக கூறமுடியவில்லை என்றாலும் சரியல்ல.

(ஏ) 1வது எதிரி எனது வீட்டிற்கு வந்து 20.10.2024 தேதிக்கு எனது பெயர் பூர்த்தி செய்து 2 காசோலைகளை கொடுத்தாரா என்றால் சரிதான். 1வது எதிரி காசோலைகளை என் கண் முன்னரே பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் வெளியிலிருந்து பூர்த்தி செய்து எடுத்து கொண்டு வந்து கொடுத்தார். எனது புகார் மனுவில் எதிரி காசோலைகளை பூர்த்தி செய்து கொடுத்தார் என்று கூறியுள்ளேன் என்றும் வெளியிலிருந்து பூர்த்தி செய்து கொடுத்தார் என்று குறிபிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் ITI படித்துள்ளேன். எந்த ஒரு ஆவணத்தையோ பேப்பரையோ பார்த்தால் அது என்ன என்று என்னால் புரிந்து கொள்ள முடியும் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இரண்டு காசோலைகளிலும் பின்புறத்தில் Beneficiary Name எனது கையெழுத்தில்தான் எழுதியுள்ளது என்றால் சரிதான்.

(ஐ) இரண்டு காசோலைகளிலும் பயனாளியின் பெயரும் தொகை எழுத்துகளிலும் வெவ்வேறு கையெழுத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலை எண் 301 903ன் பின்புறத்தில் பயனாளியின் பெயரில் எழுதப்பட்டுள்ள கையெழுத்தும் காசோலையில் முன்பகுதியில் பயனாளியின் பெயரை எழுதப்பட்டுள்ள கையெழுத்தும் ஒரே கையெழுத்துதான் என்றால் சரியல்ல. 1வது எதிரி என்னிடம் எந்த வித காசோலைகளையும் கொடுக்கவில்லை என்றாலும் 1வது எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக நீதிமன்றத்தில் மோசடியாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இரண்டு காசோலைகளிலும் முன்பகுதியிலுள்ள பயனாளியின் பெயரையும், தொகையை எழுத்திகளிலும் என்னையும் என்னை சார்ந்தவர்களும் எழுதியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

(ஒ) இரண்டு காசோலைகளையும் என்னிடம் கொடுத்ததற்கு எனது குடும்ப உறுப்பினர்கள் எவரையும் நான் சாட்சியாக குறிபிடவில்லை என்றால் சரிதான். எனக்கும் 1வது எதிரிக்கும் பகையோ, முன்விரோதமோ எதுவும் கிடையாது என்றால் சரிதான். 2வது எதிரிக்கும் எனக்கும் நேரடி தொடர்பு எதுவும் கிடையாது என்றால் சரிதான். 2வது எதிரிக்கும் எனக்கும் பகையோ, முன்விரோதமோ கிடையாது என்றால் சரிதான். நான் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனது சகோதரர் புருஷோத்தமனுக்கு தெரியும் என்றால் சரிதான். 1வது எதிரி எனக்கு கொடுத்த பதில்

அறிவிப்பில் அந்த காசோலைகளை எனது சகோதரருக்கு கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் 1வது எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில் உள்ள விவரங்களும் 1வது எதிரி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1வது எதிரி அவர் பதில் அறிவிப்பில் இரண்டு காசோலைகளையும் எனது தம்பிக்கு கொடுத்ததாக கூறியுள்ளார் என்றாலும் அதை நான் மறுத்துள்ளதால் எனக்கு வழக்கு விவரங்கள் சரியாக தெரியவில்லை என்றாலும் சரியல்ல.

(ஓ) வழக்கு விவரங்கள் தெரிந்திருந்தும் எனது தம்பியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காசோலை எண்.000 752 2வது எதிரிக்கு சொந்தமான வங்கி கணக்கிற்கான காசோலை என்றால் காசோலையை கொடுத்தபோது அந்த விவரம் எனக்கு தெரியாது. பதில் அறிவிப்பை அனுப்பிய பின்புதான் எனக்கு தெரியவந்தது. எனது சகோதரர் புருஷோத்தமனும் 1வது எதிரியும் ஏசிஎஸ் என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் Online Trading செய்து வந்தார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனது சகோதரர் புருஷோத்தமன் 1வது எதிரியிடம் Online Trading செய்ததற்காக ரூ.7 லட்சம் கொடுத்தார் என்றாலும் அதற்கு பாதுகாப்பிற்காக 1வது எதிரி மேற்சொன்ன இரண்டு காசோலைகளையும் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. ஏசிஎஸ் நிறுவனத்தை மோசடியான நிறுவனம் என்பதாக அதன் உரிமையாளர்களை போலிசார் கைது செய்து விட்டார்கள் என்றாலும் அதன் பின்பு எனது சகோதரருக்கு Online Trading மூலம் பணம் வரவில்லை என்பதால் என்னை பயன்படுத்தி மேற்படி காசோலைகளை வைத்து மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

(ஔ) எனது சகோதரரிடம் வாங்கி தொகையை முழுவதும் கொடுத்துவிட்ட நிலையிலும் எனது சகோதரர் 3 காசோலைகளை 1வது எதிரியிடம் திரும்ப கொடுக்கவில்லை என்பதாக புதுச்சேரி மாநிலம் கரிக்கலாம்பாக்கம் காவல் நிலையத்தில் 10.01.2025 தேதியில் 1வது எதிரி புகார் ஒன்றை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த புகார் சம்மந்தமாக எனது சகோதரர் புருஷோத்தமன் காவல் நிலையத்தில் ஆஜரானார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இரண்டு காசோலைகளுடன் மற்றொரு காசோலையும் சேர்த்துதான் எனது சகோதரர் மீது மேற்படி புகார் கொடுக்கபட்டது என்றால் சரிதான். எனது சகோதரர் என்னிடம்

கொடுத்த காசோலைகளை பொறுத்து நான் நீதிமன்றத்தில் பார்த்து கொள்கிறேன் என்று காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்துவிட்டு வந்தார் என்றால் சரிதான். அந்த காசோலைகள் எனது அண்ணனுக்கு சம்மந்தபட்டது அதை குறித்து நீதிமன்றத்தில் பார்த்து கொள்கிறேன் என்பதாக எழுதிக் கொடுத்துவிட்டு வந்தார். நான் சொல்வதுபோல் எனது சகோதரர் காவல் நிலையத்தில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல.

(ஃ) 1வது எதிரிக்கு ரூ.4 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு பொருளாதார வசதி கிடையாது என்றால் சரியல்ல. 1வது எதிரி எனக்கு எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் 2 காசோலைகளையும் அவர் கொடுத்ததாக நான் மோசடியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. காசோலைகளை குறித்து முழு விவரமும் தெரிந்த எனது தம்பியும் நானும் 1வது எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக மோசடியாக நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை**.**

| |
|---|
| Taken down by me/before me interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br>(Sd/-G.Aravind Bharathi)<br>Judicial Magistrate No.II,<br>Villupuram |